# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியம்

**இச்சட்டத்தின் நியதிகளின்படி ஓய்வூதியத்திற்கு தகவுடையோராக வரும் குறித்தசில ஊழியர்களுக்கு ஓய்வூதிய நன்மைகளை வழங்குவதற்கு கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியமொன்றைத் தாபிப்பதற்கும்; அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டமூலம்**

---

*பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால் 2011, ஏப்பிறல் மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2011, மாச்சு மாதம் 28 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ **99 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : 7.50**

ச.வ.-ஓ. 25/2011

**இச்சட்டத்தின் நியதிகளின்படி ஓய்வூதியத்திற்கு தகவுடையோராக வரும் குறித்தசில ஊழியர்களுக்கு ஓய்வூதிய நன்மைகளை வழங்குவதற்கு கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியமொன்றைத் தாபிப்பதற்கும்; அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

*1*. இச்சட்டம், 2011ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

## கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியத்தைத் தாபித்தலும் நிதியத்தினை நிருவகித்தலும்

**ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியத்தைத் தாபித்தல்.**

*2*. இச்சட்டத்தின் நோக்கத்துக்காக (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியம் எனவழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

**நிதியத்தின் உறுப்பாண்மை.**

*3*. (1) ஊழியரொருவர் நிதியத்துக்கு உதவுதொகைகளைச் செலுத்துவதற்கு 10ஆம் பிரிவின்கீழ் முதன்முதலாக ஆளாகவரும் நேரத்தில் அத்தகைய ஊழியர் நிதியத்தின் உறுப்பினரொருவராக வருதல் வேண்டுமென்பதுடன், நிதியத்தில் அவரது தனிப்பட்ட கணக்கில் ஏதேனும் பணத்தொகை அவரது வரவுக்கிருக்கும் காலம்வரை நிதியத்தின் உறுப்பினராகத் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.

(2) நிதியத்தின் உறுப்பினரொருவரோ அல்லது அவரின்கீழ் உரிமைகோருகின்ற எவரேனுமாளோ, இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதியின் பயனைக் கொண்டல்லாது வேறு வகையாக நிதியத்திலுள்ள பணங்கள் தொடர்பில் ஏதேனும் அக்கறை கொண்டிருத்தலோ அல்லது அவற்றுக்கான உரிமைக்கோரிக்கையெதனையும் உடையவராக விருத்தலோ ஆகாது.

இச்சட்டத்தை நிருவகித்தல்.

**4.** (1) இச்சட்டத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்ட வாறு தவிர, இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பணியகத்தின் தவிசாளர் இச்சட்டத்தின் பொது நிருவாகத்துக்குப் பொறுப்பாக விருத்தல் வேண்டும்.

(2) இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பணியகத்தின் தவிசாளரின் அல்லது அவர்சார்பில் தவிசாளரினால் அதிகார மளிக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பணி யகத்தின் எவரேனும் அலுவலரின் எவையேனும் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழ் அல்லது இச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியின்கீழ் ஆணையாளரின் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணிப்பைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது ஆற்றலாம்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகத் தேவைப்படக் கூடியவாறான மாவட்டச் செயலாளர்களும், பிரதேச செயலாளர் களும், கிராம அலுவலர்களும் உட்பட்ட அத்தகைய எண்ணிக்கை யினரான அலுவலர்கள் நியமிக்கப்படலாம்.

(4) தவிசாளர், ஒன்றில் பொதுவாகவோ அல்லது குறிப் பாகவோ, இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதி யின்கீழ் தவிசாளருக்குள்ள ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது ஆற்றுவதற்கு இப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் எவரேனும் அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம்.

நிதியம் தொடர்பாகப் பணச்சபையின் தத்துவங்களும் கடமைகளும்.

**5.** (1) பணச்சபையானது-

(அ) அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும், அதன் கடமைகளைப் புரிவதற்கும், அதன் பணிகளை ஆற்றுவதற்கும் சபையினால் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம், அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சம்பளங்களையும் வேதனங்களையும் நிர்ணயிக்கலாம் மற்றும் அவர்களின் சேவை நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்;

(ஆ) உதவுதொகைகளாகவும் மிகைக் கட்டணங்களாகவும், கட்டணங்களாகவும் இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளையும், நிதியத்தின் பணங்களை முதலீடுசெய்வதிலிருந்தான வருமானத்தையும் பெறுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பணத்தொகைகளையும் வருமானத்தையும் நிதியத்துக்கு வரவுவைத்தலும் வேண்டும்;

(இ) நிதியத்தின் பணங்களினது கட்டுக்காப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஈ) தவிசாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட ஆட்களுக்கு, இச்சட்டத்தின்கீழ் அவ்வாட்கள் எந்த நன்மைகளுக்கு உரித்துடையோராகவுள்ளனரோ அந்த நன்மைகளைச் செலுத்துதல் வேண்டும்;

(உ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாதவாறான நிதியத்தின் பணங்களுள் அத்தகையவற்றை, அத்தகைய பணங்களில் மூன்றிலிரண்டு பங்குக்குக் குறையாதது அரசாங்கப் பிணையங்களில் முதலீடுசெய்யப்படுவதனை உறுதிப்படுத்தும் அதேவேளையில், சபையானது தகுதியெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பிணையங்களில் முதலீடு செய்யலாம்;

(ஊ) நிதியம் தொடர்பில் பொதுவான கணக்கொன்றையும், நிதியத்தின் ஒவ்வோர் உறுப்பினர் தொடர்பிலும் (இச்சட்டத்தில் "தனிப்பட்ட கணக்கு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தனிவேறான கணக்கொன்றையும் பேணுதல் வேண்டும்;

(எ) 6ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட கருமங்களுக்காகத் தொங்கற் கணக்கொன்றைப் பேணுதலும் தொழிற்படுத் துதலும் வேண்டும்;

(ஏ) நிதியம் தொடர்பிலான கணக்குப் புத்தகங்கள் ஒவ் வோராண்டும் திசெம்பர் முப்பத்தோராம் நாளன் றுள்ளவாறு சமன்படுத்தப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்;

(ஐ) நிதியம் தொடர்பில் ஒவ்வோராண்டுக்கும், பெறுகை களும் கொடுப்பனவுகளும் பற்றிய கூற்றொன்றையும், சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய கூற்றொன்றை யும், வருமான செலவினக் கூற்றொன்றையும், முதலீடு களுள் ஒவ்வொன்றினதும் முகப்பெறுமதி, கொள்வனவு விலை மற்றும் சந்தைப் பெறுமதி பற்றிய கூற்றொன்றை யும் தயாரிக்கச் செய்தல் வேண்டும்;

(ஒ) ஒவ்வோராண்டுக்கும் முற்போந்த பந்தி (ஐ) இன்கீழ் தயாரிக்கப்பட்ட கூற்றுக்களுள் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை, அவ்வாண்டின் திசெம்பர் முப்பத்தோராம் நாளுக்குப் பின்னர் மூன்று மாதங் களினுள் அமைச்சருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்;

(ஓ) ஒவ்வோராண்டும் திசெம்பர் முப்பத்தோராம் நாளுக் குப்பின்னர் ஆறுமாதங்களினுள், அந்நாளன்று அத்தகைய உறுப்பினரின் தனிப்பட்ட கணக்கின் ஆக்கபூர்வமான அல்லது எதிரிடையான மீதியாக விருக்கின்ற தொகையை நிதியத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அறிவித்தல் வேண்டும்;

(ஔ) சபையும் ஆணையாளரும் இச்சட்டத்தின்கீழ் தத்தமது பணிகளை நிறைவேற்றுவதில் உறப்பட்ட செலவை, நிதியத்தின் பணங்களை முதலீடு செய்வதிலிருந்தான வருமானத்திலிருந்து கழித்தல் வேண்டும்;

(க) எவையேனும் எதிர்பாராத நிலைமைகளை அல்லது நிதியத்தின் சொத்துக்களினது சந்தைப்பெறுமதியிலான ஏதேனும் மதிப்பிறக்கத்தை ஈடுசெய்வதற்கு, பணச்சபை தீர்மானிக்கக்கூடியவாறாக நிதியத்தின் வருமானத்திலிருந்து அத்தகைய ஒதுக்குகளைத் தாபிக்கலாம்;

(ங) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் அத்தகைய சபைக்கு அளிக்கப்படக்கூடியவாறான அல்லது விதிக்கப்படக்கூடியவாறான நிதியம் சம்பந்தமான அத்தகைய வேறு தத்துவங்களையும் கடமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வோர் அலுவலரும் அல்லது சேவையாளரும், அலுவலர்களும் சேவையாளர்களும் தொடர்பாகப் பணச்சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்கும் நோக்கத்துக்காக, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழான கடமைகளைப் புரிவதற்காகத் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (க) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, "செலவுகள்" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(i) திருட்டு, கையாடல் அல்லது மிகைக் கொடுப்பனவு என்பன காரணமாகப் பணங்களின் ஏதேனும் இழப்பு;

(ii) நிதியத்தை நிருவகிப்பதில் அல்லது அதற்காகக் கொள்வனவு செய்யப்பட்டவையும், அவற்றின் ஆகுசெலவு அத்தகைய இழப்புக்குப் பொறுப்பாகவுள்ள

ஆட்களிடமிருந்து அறவிடப்படமுடியாதவையுமான தளபாடங்களாகவும், அலுவலகச் சாதனங்களாகவும், அல்லது எழுதுகருவி வகையாகவும் உள்ள பொருட்களின் ஏதேனும் இழப்பு; அத்துடன்

(iii) பயன்படுத்தப்படமுடியாதவையும் அல்லது தொழிற்படுத்தப்படமுடியாதவையும் திருத்தப்பட இயலாதவையுமான எழுதுகருவி, தளபாடம் அல்லது அலுவலகச் சாதனங்களாகவுள்ள எவையேனும் பொருட்களின் பெறுமதி.

பணச்சபையின் தொங்கற் கணக்கு.

**6**. (1) கொடுத்துதவப்பட்ட எந்த விபரத்திரட்டுகள் தொடர்பில் குறைபாடுகள் அல்லது பிழைகள் இருக்கின்றனவோ அந்த விபரத்திரட்டு தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் பெறப்பட்ட எல்லா உதவுதொகைகளும் பணச்சபையினால் பேணப்பட்டு தொழிற்படுத்தப்படும் தொங்கற் கணக்குக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், பணங்கள் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவுவைக்கப்படமுடியாது.

(2) நிதியத்தினால் பேணப்பட்ட கணக்கொன்றில் வைத்திருக்கப்படும் மேலே குறித்துரைக்கப்படுகின்றவாறான எவையேனும் பணங்கள், பணச் சபையினால் தொங்கற் கணக்குக்கு கைமாற்றப்படுதல் வேண்டும்.

(3) இப்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக எவையேனும் பணங்கள் தொங்கற் கணக்கிலிருந்து தனிப்பட்ட கணக்கொன்றுக்குக் கைமாற்றப்படுமிடத்து, அத்தகைய பணங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து அத்தகைய பணங்கள் தனிப்பட்ட கணக்குக்குக் கைமாற்றப்படும் தேதி வரையிலான காலப்பகுதிக்கு, அத்தகைய கைமாற்றல் தேதிக்கு முன்னர் ஆறாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு, பணத்தொகைமீது வட்டி செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், வட்டிவீதமானது, சட்டத்தின் 15ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தீர்மானிக்கப்பட்டாலும், வட்டி எந்த ஆண்டு தொடர்பில் செலுத்தப்படுகின்றதோ அந்த ஆண்டுக்கு ஏற்புடையற்பாலதுமான வீதமாதல் வேண்டும்.

*கணக்காய்வாளர் தலைமையதிபதி, நிதியத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் முதலிய.*

**7.** (1) ஒவ்வோராண்டும் தொடர்பிலான நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், கணக்காய்வின் ஆகுசெலவு, நிதியத்திலிருந்து அவருக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும். இவ்வுட்பிரிவின்கீழ் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது நிதியத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அவரது திணைக்களத்தைச் சேர்ந்த எவரேனும் அலுவலர், அத்தகைய கணக்குகளைக் கணக்காய்வுசெய்யும் நோக்கங்களுக்காக அவசியமெனக் கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய அலுவலர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாப் புத்தகங்களையும் ஆவணங்களையும் பார்வையிடக்கூடியவர்களாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறாக, பணச்சபையினாலும் ஆணையாளரினாலும், அவர்களின் அறிவுக்குட்பட்ட அல்லது அவர்களினால் நிச்சயிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தகவல் கொடுத்துதவப்படுதலும் வேண்டும்.

(3) கணக்காய்வாளர் தலைமையதிபதி நிதியத்தின் கணக்குகளைப் பரிசோதனை செய்தல் வேண்டுமென்பதுடன்,-

(அ) அவருக்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவல்களையும் அவர் பெற்றுள்ளாரா அல்லது அல்லரா எனக் கூறுகின்றதும்;

(ஆ) அறிக்கையில் குறிப்பீடுசெய்யப்பட்ட கணக்குகள், ஓய்வூதிய நிதியத்தின் வரவுக்கிருக்கும் பணங்கள் பற்றிய செம்மையானதும், நியாயப்படுத்தப்படற்பாலதுமான பகுப்பாய்வொன்றை வெளிக்காட்டும் வகையில் தகுந்தமுறையில் வரையப்பட்டுள்ளனவா எனக் கூறுகின்றதும்; அத்துடன்

(இ) அவரது அபிப்பிராயத்தில் அத்தகைய கணக்குகளின் ஏதேனும் பரிசோதனையில் பாராளுமன்றம் அக்கறைகொள்ளக்கூடிய அத்தகைய கணக்குகளிலுள்ள ஏதேனும் விடயத்துக்குக் கவனத்தை ஈர்க்கின்றதும்,

ஆன, அறிக்கையொன்றை வருடாந்தம் அமைச்சரிடம் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(4) அத்தகைய அறிக்கையானது நிதியத்தின் எவரேனும் உறுப்பினரது பெயரை வெளிவிடுதலாகாது.

(5) இப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையினது பிரதியொன்றையும், 5ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியின்கீழ் பணச்சபையினால் அமைச்சருக்கு அனுப்பப்பட்ட கூற்றுக்களின் பிரதிகளையும் அமைச்சர் பாராளுமன்றத்தின்முன்னர் இடுதல் வேண்டும்.

*அரசாங்கத்துக்கான மீளளிப்புகள்.*

**8**. (1) நிதியத்தைத் தாபிப்பிற்கான முதனிலை ஒழுங்கேற்பாடுகளைச் செய்வதில் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக, இச்சட்டம் இயற்றப்படும் தேதிக்கு முன்னர் ஆணையாளருக்கு;

(2) இச்சட்டம் இயற்றப்படும் தேதியன்று தொடங்குகின்றதும், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின் போது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதில் அத்தகைய சபையினாலும் ஆணையாளரினாலும் உறப்பட்ட மூலதனச் செலவின முட்பட்ட எல்லாச் செலவினங்களையும் கொடுத்துத் தீர்ப்பதற்காகப் பணச்சபைக்கு,

திரட்டுநிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட ஒவ்வொரு பணத்தொகையும் அரசாங்கத்திடமிருந்து பணச்சபைக் கான கடனொன்றாகவமைதல் வேண்டுமென்பதுடன், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கிணங்க மீளளிக்கப் படுதலும் வேண்டும்.

சட்டத்தை நிருவகிப்பதில் உறப்பட்ட செலவுகள்.

**9**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் தவிசாளரினாலும் பணச்சபையினாலும் உறப்பட்ட செலவுகள், நிதியத்தின் பணங்களை முதலீடு செய்வதிலிருந்தான வருமானத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் பாகம் IVஇன் ஏற்பாடுகளிலிருந்தான செலவுகள், நிதியத்தின் பணங்களை முதலீடு செய்வதிலிருந்தான வருமானத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### இச்சட்டம் ஏற்புடையதாகும் ஊழியர்களும், மேவப்பட்ட தொழில்களும் மற்றும் உதவுதொகைகளும்

இச்சட்டம் ஏற்புடையதாகும் ஊழியர்கள்.

**10**. அரசாங்க ஓய்வூதியம் பற்றிய குறிப்புகளின்கீழ் அல்லது தொழில் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓய்வூதிய நிதியத்தின்கீழ் மேவப்படாத கடல்கடந்த தொழிலொன்றில் ஈடுபட்டுள்ள எவரேனுமாள் அவர்கள் அவ்வாறு விரும்பின் 2ஆம் பிரிவின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட நிதியத்தின் உறுப்பினரொருவராக வரலாமென்பதுடன், உறுப்பினர்களாகவரும் எல்லா ஊழியர்களும் இச்சட்டம் ஏற்புடையதாகும் ஆட்களாகவிருத்தல் வேண்டும்.

உதவு தொகைகள்.

**11**. (1) இச்சட்டம் எவ்வூழியருக்கு ஏற்புடையதாகின்றதோ அவ்வூழியர் ஒருவர் கடல்கடந்த தொழில் ஒன்றில் அத்தகைய ஊழியர் ஈடுபட்டிருக்கும் காலப்பகுதியின்போது குறைந்தபட்சம் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளுக்கு வருடாந்தம் பன்னிரெண்டாயிரம் ரூபாவிற்குக் குறையாத தொகையொன்றினை உதவுதொகையாகச் செலுத்துவதன்மூலம் நிதியத்தில் சேரலாம். (இப்பிரிவின் நோக்கங்களுக்காக “ஆண்டு” என்பது தொடர்ச்சியான ஏதேனும் பன்னிரெண்டு பஞ்சாங்க மாதங்கள் என்று பொருள்படும்) அத்தகைய குறைந்தபட்ச உதவுதொகை ஊழியரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைக் கட்டணங்களில் செலுத்தப்படலாம். ஊழியர் ஒருவர், அவரின் ஐம்பத்தைந்து வயதை அடைவதற்கு முன்னர் குறைந்தபட்ச உதவுதொகையைச் செலுத்தியிருத்தல் வேண்டும்.

(2) நிதியமானது-

(அ) ஆரம்ப மூலதனமாக திரட்டுநிதியத்திலிருந்து அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்படவேண்டிய ஆயிரம் மில்லியன் ரூபா தொகையொன்றை;

(ஆ) 2011, ஏப்பிரல் 1இல் உள்ளவாறான இலங்கையின் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பணியகத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட நிதியத்தின் வரவுக்கிருக்கும் பணத் தொகைகள் நிதியத்திற்கு கைமாற்றப்படுதல் வேண்டு மென்பதையும்,கொண்டிருத்தல் வேண்டும்.

உதவுதொகைகளைச் செலுத்துவதற்கான பொறுப்புத் தொடங்குதல்.

**12.** (1) பத்தாம் பிரிவின்கீழ் உதவுதொகைகளைச் செலுத்துவதற்கு ஊழியரொருவரின், தொழில் ஆணையாளரின் அல்லது அத்தகைய வேறு அதிகாரியின் பொறுப்பு, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் அத்தகைய தொழில் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு உடனடியாகப்பின்னரான நாளன்று தொடங்குதல் வேண்டும்.

(2) கடல்கடந்த தொழில் ஒன்றிலுள்ள ஊழியர் ஒருவர் இதற்கான 10ஆம் பிரிவில் விதிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியின்பின்னர் ஏதேனும் நேரத்தில் இப்பிரிவின்கீழ் உதவுதொகைகளைச் செலுத்துவதற்குத் தொடங்கலாம்.

உதவு தொகைகளின் மீதான வட்டி முதலியன.

**13.** (1) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பணச்சபையினால் வருடாந்தம் நிர்ணயிக்கப்படக்கூடியவாறாக, இரண்டு தசம் ஐந்து சதவீதத்துக்குக் குறையாத வருடாந்த வட்டி வீதமொன்று, நிதியத்தின் ஒவ்வோர் உறுப்பினரதும் தனிப்பட்ட கணக்கின் வரவுக்கிருக்கும் தொகைமீது, நிதியத்தின் பணங்களை முதலீடு செய்வதிலிருந்தான வருமானத்திலிருந்து மாதாந்த அடிப்படையின்மீது தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியத்தின் பணங்களினது முதலீட்டிலிருந்தான வருமானம், இச்சட்டத்தின்கீழ் நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட உதவுதொகைகளின்மீது செலுத்தப்படற்பாலதான வட்டியின் ஏதேனும் பாகத்தைச் செலுத்துவதற்குப் போதாததாகவிருக்குமிடத்து, பற்றாக்குறையின் தொகை, அந்நோக்கத்துக்காகப் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட பணங்களிலிருந்து ஈடுசெய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை, அரசாங்கத்திடமிருந்து பணச்சபைக்கானவொரு கடனாகவமைதல் வேண்டுமென்பதுடன், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கிணங்க மீளளிக்கப்படுதலும் வேண்டும்.

(4) நிதியமானது, 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தொழில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதிய நிதியமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

உதவு தொகைகளை அறவிடுதல்.

**14.** (1) நிதியத்துக்கு வருமதியான எவையேனும் பணங்கள், எந்த வழக்கில் வழக்குநடவடிக்கைகள் சுருக்கமுறை நடவடிக்கை முறை என்றவகையாக நடாத்தப்படலாமோ அந்த வழக்கின்மூலம் அரசுக்கு வருமதியான தனிசொன்றாக அறவிடப்படற்பாலனவாதல் வேண்டும். எந்த வழக்குகளின் நடவடிக்கைமுறை சுருக்கமுறையானதாகவுள்ளதோ அந்த வழக்குகள் தொடர்பாகக் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள் இப்பிரிவின்கீழானவொரு வழக்குக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வழக்குக்கு அத்தகைய ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும் நோக்கங்களுக்காக மட்டும், அச்சட்டக்கோவையின் 8ஆம் பிரிவில் காணப்படும் “இக் கட்டளைச்சட்டத்தின்மூலம்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “இக்கட்டளைச்சட்டத்தின்மூலம் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்மூலம்” என்னும் சொற்கள் இடப்பட்டிருந்தனவென்றாற்போன்று அப்பிரிவு பயனுறுதலும் வேண்டும்.

(2) நிதியத்துக்கு வருமதியான எவையேனும் பணங்களை அறவிடுவதற்கான வழக்குநடவடிக்கைகள் ஆணையாளரினால் அல்லது அதற்கென அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் தொடுக்கப்படலாமென்பதுடன், ஆணையாளர் அல்லது அத்தகைய அலுவலர், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய வழக்குநடவடிக்கைகளையும் நடாத்தலாம்.

(3) ஆட்சியுரிமைக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் கீழ் உதவுதொகைகளாக அல்லது மிகைக் கட்டணங்களாகச் செலுத்தப்படற்பாலனவான எவையேனும் பணத்தொகைகளை அறவிடுவதற்கு ஏற்புடையனவாதலாகாது.

பணத் தொகைகள் உறுப்பினர் களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவு வைக்கப்படுதல்.

**15**. நிதியத்தின் உறுப்பினரொருவரினதும் அவர்தொடர்பில் அவரது தொழில்தருநரினதும் உதவுதொகைகளும் அத்தகைய உதவுதொகையின்மீதான வட்டியும், அத்தகைய உறுப்பினரின் தனிப்பட்ட கணக்குக்குப் பணச்சபையினால் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

தனிப்பட்ட கணக்குகளின் வரவுக்கிருக்கும் பணம் பராதீனப்படுத்தப் படற்பாலதாகாது.

**16**. நிதியத்தின் உறுப்பினரொருவரினது தனிப்பட்ட கணக்கின் வரவுக்கிருக்கும் ஏதேனும் பணத்தொகையின் ஒவ்வொரு சாட்டுதலும் அல்லது அதன்மீதான பொறுப்பும், மற்றும் அத்தகைய ஏதேனும் பணத்தொகையைச் சாட்டுதல் செய்வதற்கான அல்லது பொறுப்பிப்பதற்கான ஒவ்வோர் உடன்படிக்கையும் வறிதானதாதல் வேண்டுமென்பதுடன், அந்த உறுப்பினர் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் கடனிறுக்க வகையற்றவரெனத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அத்தகைய ஏதேனும் பணத்தொகை, கடனிறுக்கவகையறவுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அவ்வுறுப்பினரின் கடன் கொடுத்தோரின் சார்பில் செயலாற்றுகின்ற எவரேனும் சாட்டுதல்பெறுநரைச் சென்றடைதலுமாகாது.

## பாகம் III

### ஓய்வூதியம்

ஓய்வூதியம் எந்நேரத்தில் செலுத்தப்பட வேண்டு மென்பது.

**17.** (1) நிதியத்தின் உறுப்பினரொருவர், இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிரவும் 10ஆம் பிரிவின் நியதிகளில் செய்யப்பட்ட உதவுதொகைகளுக்கு அமையவும் அத்தகைய உறுப்பினர் அறுபத்தைந்து வயதை (65) அடைவதன் மேல் மாதாந்த ஓய்வூதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் ஏற்புடையதாகவுள்ளவரும், நிதியத்தின் உறுப்பினரொருவராகவுள்ளவருமான ஆளொருவர் உயிரோடிருக்கின்றாரென ஆகக்குறைந்தது வருடாந்தமேனும் உறுதிப்படுத்துமாறு ஆணையாளர் அந்தந்த மாவட்டச் செயலாளரை, பிரதேச செயலாளரை அல்லது கிராம அலுவலரைத் தேவைப்படுத்துதல் வேண்டும். இலங்கைக்கு வெளியே வதிகின்ற அவ்வுறுப்பினர்கள் தொடர்பில், சரிபார்த்தலானது அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களினூடாக அல்லது அது இல்லாவிடில், கிடைக்கக்கூடிய தூதுத் தொடர்பு வழிகள் மூலமாகச் செய்யப்படுதல் வேண்டும். இறந்துள்ளவராக அறிக்கையிடப்பட்ட எவரேனும் உறுப்பினரின் பெயரைக் கீறிவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

குறித்தசில சூழ்நிலைகளில் திரண்ட பணத்தொகையொன்று எவ்வாட்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டு மென்பது.

**18.** (1) நிதியத்தின் உறுப்பினரொருவர்-

(அ) இச்சட்டத்தின் நியதிகளின்படி தேவைப்படுத்தப்பட்டவாறு உதவுதொகை செலுத்தியிருந்து ஓய்வூதியமொன்றைப் பெறுமுன்னர்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு உதவுதொகை செலுத்துவதனைப் பூர்த்திசெய்யாமல் ஓய்வூதியமொன்றைப் பெறுமுன்னர்,

பதினெட்டு வயதுக்குக் குறைந்தவரும், அல்லது உடல்ரீதியாக அல்லது உளரீதியாக இயலாமைக்குட்பட்டவரெனப் பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலரினால் சான்றுப்படுத்தப்பட்டவரும் ஆதலால் தாமாகவே தமது வாழ்வாதாரத்தை ஈட்டுவதற்குத் தகுதியற்ற வருமானவொரு பிள்ளையை விட்டு இறக்குமிடத்து, உறுப்பினரின் தனிப்பட்ட கணக்கின்

வரவுக்கிருக்கும் தொகையின் அறுபது சதவீதத்துக்குச் சமமான திரண்ட பணத்தொகையொன்று, அத்தகைய தங்கிவாழுநருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். ஒருவருக்கு மேற்பட்ட தங்கிவாழுநர் இருப்பின், அத்தகைய தொகை சமமான பங்குகளில் தங்கிவாழுநர்களுக்கிடையே பிரிக்கப்படும்.

(2) நிதியத்தின் உறுப்பினரொருவர் வேலைசெய்வதற்கு நிரந்தரமான இயலாமை காரணமாகத் தொழிலுக்கமர்த்தப்படா தொழியுமிடத்தும், அக்காரணத்துக்காக வேலை செய்வதற்குத் தகுதியற்றவரெனப் பதிவுசெய்யப்பட்ட மருத்துவத் தொழில ரொருவரினால் சான்றுப்படுத்தப்படுமிடத்தும், அத்தகைய உறுப்பினர் இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு உதவுதொகைகளைச் செலுத்துவதனைப் பூர்த்திசெய்திராத விடத்தும், அவ்வுறுப்பினரின் தனிப்பட்ட கணக்கின் வரவுக் கிருக்கும் தொகையின் அறுபது சதவீதத்துக்குச் சமமான பணத் தொகையொன்று அத்தகைய உறுப்பினருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*ஓய்வூதிய மொன்றைப் பெறுவதற்கான உரிமைக் கோரிக்கை.*

**19**. இச்சட்டத்தின்கீழ் ஓய்வூதியமொன்றுக்கு உரிமையுள்ள எவரேனுமாள் அல்லது அவரது சார்பில் எவரேனுமாள், இச் சட்டத்தின்கீழ் அவ்வாறு அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் விதித்துரைக்கப்பட்ட முறையில் அதற்கான உரிமைக்கோரிக்கை யொன்றைச் செய்தல் வேண்டுமென்பது அவ்வாளின் ஓய்வூதியத் துக்கான உரிமையின் நிபந்தனையொன்றாதல் வேண்டும்.

## பாகம் IV

### உரிமைக்கோரிக்கைகளைத் தீர்மானித்தல்

*ஆணையாளர் அல்லது ஆணை யாளரினால் அதிகாரமளிக் கப்பட்ட அலுவல ரொருவர் உரிமைக் கோரிக்கைகளைத் தீர்மானித்தல்.*

**20**. ஓய்வூதியங்களுக்கான எல்லா உரிமைக்கோரிக்கைகளும் ஆணையாளர் அல்லது அவரினால் அதற்கென அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினரின் தனிப்பட்ட கணக்கில் கிடைக்கக்கூடிய மீதீயின் மீதான ஆணையாளரின் அல்லது அத்தகைய அலுவலரின் தீர்மானம், இச்சட்டத்தின்

ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய தீர்மானத்துக்கெதிராகச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின்மீதான ஏதேனும் முடிபுக்கமைய, இறுதியானதாதலும் வேண்டும்.

ஆயின், இப் பிரிவின்கீழ் எவரேனும் அலுவலரினால் செய்யப்பட்ட ஏதேனும் தீர்மானம், விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஆணை யாளரினால் அவரது சொந்தப் பிரேரணையின்மீது பரிசீலனை செய்யப்படலாம்; அத்துடன் அத்தகைய விடயத்தில் ஆணை யாளரின் தீர்மானம், 27ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, அவ்விடயத்திலான தீர்மானமாகக் கருதப்படுதல் வேண்டும்.

மேன் முறையீடுகள்.

**21.** (1) இருபதாம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் தீர்மானத்தினால் இன்னலுறும் எவரேனுமாள், விதித்துரைக் கப்பட்ட முறையில் அமைக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் “நியாயசபை” எனக் குறிப்பீடு செய்யப்படுவது மான) மேன்முறையீட்டு நியாயசபையொன்றுக்கு அத்தகைய தீர்மானத்துக்கெதிராக மேன்முறையீடு செய்யலாமென்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டின்மீது நியாயசபையின் முடிபு, இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய முடிவிற்கு எதிராகச் செய்யப்பட்ட மேன்முறை யீட்டின்மீது மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆக்கக்கூடிய ஏதேனும் கட்டளைக்கமைய, இறுதியானதாதலும் வேண்டும்.

(2) நியாயசபைக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின் மீதான நியாயசபையின் முடிபுபற்றி ஆணையாளர் அல்லது மேன்முறையீட்டுக்கான எவரேனும் திறத்தவர் அத்தகைய மேன்முறையீட்டின்மீது அதிருப்தியடையுமிடத்து, ஆணையாளர் அல்லது அத்திறத்தவர், மேன்முறையீட்டுக்கான ஏனைய ஒவ்வொரு திறத்தவரும் பிரதிவாதியொருவராகக் குறிப்பிடப்படும் எழுத்திலான மனுவின்மூலம், சட்டப் பிரச்சினையொன்றின்மீது அம்முடிபுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம். மேன்முறையீட்டு மனுவானது விவாதிக்கப்படவேண்டிய சட்டப்பிரச்சினையைக் கூறுதலும், அத்தகைய பிரச்சினை மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்படுவதற்குத் தகுதியானதெனச் சட்டத்தரணியொரு வரினாலான சான்றிதழொன்றைக் கொண்டிருத்தலும்,

நியாயசபையின் எந்த முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த முடிபின் தேதிக்குப்பின்னர் இருபத்தொரு நாட்களினுள் மேன்முறையீட்டாளரினால் நியாயசபைக்கு முன்வைக்கப்படுதலும், பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்ட ஒவ்வோர் ஆளுக்கும் சேர்ப்பிக்கப்படுவதற்காகப் போதிய எண்ணிக்கையினவான பிரதிகளுடன் சேர்த்தனுப்பப் படுதலும் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு மேன்முறையீட்டு மனுவும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்தனுப் பப்படுதல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டு மனுவொன்று இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையிலும் காலத்தினுள்ளும் நியாயசபைக்கு முன்வைக்கப்படுமிடத்து–

(அ) மனுவானது நியாயசபையின் எந்த முடிபுகளுக் கெதிராகச் செய்யப்படுகின்றதோ அந்த முடிபுகள் எந்த வழக்கு நடவடிக்கைகளில் எடுக்கப்படுகின்றனவோ அந்த வழக்குநடவடிக்கைகளின் பதிவேட்டுடன் சேர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மனுவானது அனுப்பப்படுவதனைச் செய்விப்பதும்; அத்துடன்

(ஆ) மேன்முறையீடுபற்றிய அறிவித்தலும் மேன்முறையீட்டு மனுவின் பிரதியொன்றும், மேன்முறையீட்டு மனுவில் பெயர்குறிப்பிடப்பட்ட பிரதிவாதிகளுள் ஒவ்வொரு வருக்கும் சேர்ப்பிக்கப்படுவதனைச் செய்விப்பதும், நியாயசபையின் கடமையாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான ஒவ்வொரு மேன்முறையீடும் அந்த நீதிமன்றத்தின் எவரேனும் இரு நீதிபதிகளினால் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழான ஏதேனும் மேன்முறையீட்டில் மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் முடிபொன்று அளிக்கப்படு வதன்மேல், அந்நீதிமன்றத்தின் பதிவாளர், அந்நீதிமன்றத்தின் முடிவுடன்சேர்த்து அவ்வழக்கை நியாயசபைக்கு அனுப்புதல் வேண்டுமென்பதுடன், அந்நீதிமன்றத்தின் முடிபு அவ்வாறு

தேவைப்படுத்தினால், எந்த நியாயசபையிலிருந்து மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த நியாயசபையின் முடிபை, அந்நீதி மன்றத்தின் முடிபினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய முறையில் ஒழிப்பதும் அல்லது வேறுபடுத்துவதும், அவசியமானவிடத்து, அந்நீதிமன்றத்தின் முடிபுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அதன் முப்பது நாட்களினுள் அது தொடர்பான புதியவொரு முடிபைச் செய்வதும் நியாய சபையின் கடமையாதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டில் நீதிமன்றம் தகுதி யானதாகக் கருதுகின்றவாறாக ஆகுசெலவுக்கான அத்தகைய கட்டளையினை நீதிமன்றம் ஆக்கலாம்.

(7) இப்பிரிவின் (6)ஆம் உட்பிரிவின்கீழ் ஆளொருவரினால் செலுத்தப்படவேண்டுமென மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்ட எவையேனும் ஆகுசெலவுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அவ்வாள் வதிகின்ற இடத்தில் நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப் பத்தின்மீது, அதன் சாதாரண நியாயாதிக்கம் விதிக்கின்ற அத்த கையது எவ்வாறிருப்பினும், அந்நீதிவான் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றென்றாற்போன்று அதேமுறை யில் அறவிடப்படலாம்.

(8) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதி களுக்கமைய, நியாயசபை அதன் சொந்த நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

நியாயசபையின் உறுப்பினர் களுக்கான ஊதியம்.

**22.** நியாயசபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

**23.** (அ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்றவரான; தவறுகள்.

(ஆ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அவரது அறிவுக்கெட்டியவரை உண்மையற்றதாக அல்லது பிழையானதாக உள்ள தகவலை, அதன் உள்ளீடுகள், அல்லது அதன் உள்ளீடுகளுள் ஏதேனும் பாகம் அவரது அறிவுக்கெட்டியவரை உண்மையற்றதாக அல்லது பிழையானதாக உள்ள ஏதேனும் ஆவணத்தைக் கொடுத்துதவுகின்றவரான;

(இ) 19ஆம் பிரிவின்கீழான தத்துவங்களைப் பிரயோகிக்கையில் ஆணையாளருக்கு அல்லது வேறெவரேனுமாளுக்கு வேண்டுமென்று தாமதம் விளைவிக்கின்றவரான அல்லது முட்டுக்கட்டையிடுகின்றவரான; அல்லது

(ஈ) 20ஆம் பிரிவின்கீழ் ஆணையாளர் தமது தத்துவத்தைப் பிரயோகிக்கையில் அவரினால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்பை மீறுகின்றவரான, எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

**24.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளொவ்வொருவரும், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டுமென்பதுடன், அத்துடன் சேர்த்து மேலதிகமாக, குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டபின்னர் தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாள் தொடர்பிலும் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும். தவறுகளுக்கான தண்டனை.

ஆணையாளரின் அனுமதியின்றி குற்ற வழக்கெதுவு மில்லை.

**25.** இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக்கெதுவும், தவிசாளரின் எழுத்திலான அறிவிப்பின்மூலம் அல்லது அதனுடன் அன்றி, தொடுக்கப்படுதலாகாது.

ஒழுங்கு விதிகள் மற்றும் கட்டளைகள் முதலிய வற்றுக்கான எண்பிப்பு.

**26.** (1) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அல்லது கட்டளை எவ்வர்த்தமானியில் வெளியிடப்படுகின்றதோ அவ்வர்த்தமானியின் பிரித்தெடுத்தபகுதி, அல்லது உண்மைப் பிரதியென ஆணையாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட அத்தகைய ஒழுங்குவிதியின் அல்லது கட்டளையின் பிரதி, அத்தகைய ஒழுங்குவிதிக்கான அல்லது கட்டளைக்கான எண்பிப்பாக நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) எவையேனும் சட்ட வழக்குநடவடிக்கைகளில்-

(அ) உண்மைப் பிரதியாகவுள்ளதென, இலங்கை மத்திய வங்கியின் கணக்கொன்றின் நோக்கங்களுக்காகப் பணச்சபையினால் பேணப்பட்ட ஏதேனும் கணக்குப் புத்தகத்திலான பதிவீடொன்றின் பிரதியொன்று; அல்லது

(ஆ) உண்மைப்பிரதியென ஆணையாளரினால் சான்றுப் படுத்தப்பட்டுள்ளதெனக்கொள்ளப்படுகின்றதும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணையாளரினால் பேணப்பட்ட ஏதேனும் புத்தகத்தில் அல்லது பதிவேட்டில் உள்ளதுமான பதிவீடொன்றின் பிரதியொன்று,

அத்தகைய பதிவீடு செய்யப்பட்டுள்ளமை பற்றிய நிகழ்வினதும் அதன் உள்ளீடுகளினதும் முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

வருமான வரியிலிருந்து விலக்களித்தல்.

**27.** (1) நிதியத்தின் எவையேனும் பணங்களை முதலீடு செய்வதிலிருந்தான வருமானம், வருமானவரி விதித்தல் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் இறுக்கப்படற்பாலதான வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியானது, 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டவோர் ஓய்வூதிய நிதியமாகக் கருதப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவில் "ஆணையாளர்" மற்றும் ஆணையாளர் தலைமையதிபதி" என்பன, 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*முத்திரைத் தீர்வை யிலிருந்து விலக்களித்தல்.*

**28.** முத்திரைத்தீர்வையானது, விதித்துரைக்கப்படக்கூடிய வாறு இச்சட்டத்தின் நோக்கம் சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்ட அத்தகைய ஆவணங்களின்மீது இறுக்கப்படற்பாலதாதலாகாது.

*இச்சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைக் கான பாதுகாப்பு.*

**29.** இச்சட்டத்தை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளைப் பின்பற்றி நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்படுவதற்கு உட்கருதப்படும் எதற்காகவும் எவரேனுமாளுக்கெதிராகத் துடர்ச்சி, குற்றவழக்கு அல்லது வேறு சட்ட வழக்குநடவடிக்கையெதுவும் இருத்தலாகாது.

*ஒழுங்கு விதிகள்.*

**30.** (1) இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன் கொடுக்கும் நோக்கத்துக்காகவும், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, அமைச்சர், பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) இச்சட்டத்தின்கீழ் உதவுதொகைகளையும் ஏனைய கொடுப்பனவுகளையும் சேகரித்தலுடன் சம்பந்தப்பட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும்;

(ஆ) நிதியத்துக்குப் பிழையாகச் செலுத்தப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை மீளளித்தல் தொடர்பிலும்;

(இ) ஒரு பிள்ளையாகவுள்ள அல்லது அப்போதைக்குச் செயலாற்ற இயலாதிருக்கக்கூடிய நன்மைக்கான ஓர் உரிமைக்கோரிக்கையாளரின் சார்பில், இச்சட்டத்தின்கீழ் உரிமைக்கோரிக்கையாளர் பிரயோகிப்பதற்கு உரித்துடையவராகவிருக்கக்கூடிய ஏதேனும் உரிமையைப் பிரயோகிப்பதற்கு ஆளொருவர் நியமிக்கப்படுவதனை இயலச்செய்வதற்கும், அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆளொருவர், உரிமைக்கோரிக்கையாளர் உரித்துடையவராகவுள்ள நன்மையொன்றைப் பெறவும் கையாளவும் அவருக்கு அதிகாரமளிப்பதற்கும்;

(ஈ) அவர் தொடர்பில் நிதியத்தில் அவ்வுறுப்பினரின் தனிப்பட்ட கணக்கின் வரவுக்கிருக்கும் தொகை, அவ்வுறுப்பினர் இறக்கும்பட்சத்தில் செலுத்தப்படக்கூடியதாகவிருக்கலாம்;

(உ) இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட நியாயசபைக்கான மேன்முறையீடுகள் எம்முறையிலும் எக்காலத்தினுள்ளும் செய்யப்படுதல் வேண்டுமென்பது தொடர்பிலும்;

(ஊ) அத்தகை நியாயசபைகளுக்கான மேன்முறையீடுகளுக்காகச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் தொடர்பிலும்;

(எ) அத்தகைய நியாயசபையினால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும் அதனால் பிரயோகிக்கப்படற்பாலனவான தத்துவங்களும் தொடர்பிலும்;

(ஏ) நியாயசபைக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றுக்கான எவரேனும் திறத்தவருக்கெதிராக அத்தகைய நியாயசபையினால் எச்சூழ்நிலையில் செலவுத் தொகைகள் அளிக்கப்படக்கூடும் மற்றும் அத்தகைய செலவுதொகைகளை அறவிடும் முறையில் என்பன தொடர்பிலும்;

(ஐ) பின்வருவனமூலம் எழுகின்ற கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்கும்:

(i) ஒரு நன்மைக்கான ஏதேனும் உரிமைக் கோரிக்கையின் அல்லது நன்மையொன்றுக்கு எவரேனுமாளின் உரிமையை அல்லது நிதியத்துக்கான உதவுதொகைகளுக்கான எவரேனுமாளின் பொறுப்பைப் பாதிக்கினற் ஏதேனும் பிரச்சினையின் (முதனிலையிலாயினுஞ்சரி மேன்முறையீட்டின்மீதாயினுஞ்சரி) இச்சட்டத்தின்கீழான தீர்மானம் செய்யப்படும்வரை; அல்லது

(ii) நியாயசபைக்கான மேன்முறையீட்டின் மீதான மீளாய்விலிருந்து அத்தகைய ஏதேனும் உரிமைக்கோரிக்கை அல்லது பிரச்சினை மீதான ஏதேனும் முடிபு;

(ஒ) ஓய்வூதியமொன்றுக்கான உரிமைக் கோரிக்கையின்மீது தீர்மானம் தவிசாளரினால் பரிசீலனை செய்யப்படும்வரை அந்த ஓய்வூதியம் அளிக்கப்படுவதனை இடைநிறுத்திவைப்பதற்கும்;

(ஓ) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டின் பயனைக்கொண்டு செய்யப்பட்டவொரு தீர்மானத்தின்கீழ் எவரேனுமாளுக்குச் செலுத்தப்பட்டதும், செலுத்தப்படற்பாலதல்லாததென அடுத்துப்பின்னர் முடிபுசெய்யப்பட்டதுமான ஏதேனும் பணத்தொகை முறையாகச் செலுத்தப்பட்டதாகக் கொள்வதற்கும், அப்பணத்தொகை அவரினால் மீளளிக்கப்படுவதற்கும் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கும்;

(ஔ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் தொழிலுக்கமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் படிகளைச் செலுத்துதலும் அத்தகைய படிகளைக் கணிப்பீடுசெய்யும் முறையும்;

(க) இச்சட்டத்தை நிருவகிப்பது சம்பந்தமாக உறப் படக்கூடிய நட்டங்களைப் பதிவளிப்பதற்கான கட்டணங்களை அறவிடுவதற்கும்; அத்துடன்

(ங) இச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அல்லது அதன் நெறிகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியாகக் கூடியவரை விரைவாக அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப் படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டதாகக் கருதப் படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**31.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத் தினாலொழிய– பொருள்கோடல்.

“தவிசாளர்” என்பது, ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்புப் பணியகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்புப் பணியகத்தின் தவிசாளர் எனப் பொருள்படும்;

"ஊழியர்" என்பது, கடல்கடந்த தொழிலில் ஈடுபட்டுள்ள வரும் அரசாங்க ஓய்வூதியக் குறிப்புகளின்கீழ் அல்லது தொழில் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓய்வூதிய நிதியத்தின்கீழ் மேவப்படாதவரு மான எவரேனுமாள் எனப் பொருள்படும்;

"பணச்சபை" என்பது, பணச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பணச்சபை என்று பொருளாகும்.

*ஏனைய எழுத்திலான சட்டத்துடன் முரண்படும் விடயத்தில் சட்டம் மேலோங்கி நிற்றல்.*

**32.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுறுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தினதும் அத்தகைய வேறு சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் ஏதேனும் விடயத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**33.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்